செ. கு. எண்: 057 நாள்: 10.06.2019

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்களின் அறிக்கை – 10.6.2019

8.6.2019 அன்று காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், எட்டையபுரம் கிராமம் அருகே ஏற்பட்ட சாலை விபத்தில், சென்னை, பெருங்குடி, கல்லுக்குட்டையைச் சேர்ந்த மாலை முரசு தொலைக்காட்சி நிறுவனத்தின் செய்தியாளர் திரு. செந்தில்குமார் அவர்கள் உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து 8.6.2019 அன்றே நான் இரங்கல் தெரிவித்து இருந்தேன்.

சாலை விபத்தில் உயிரிழந்த மாலை முரசு தொலைக்காட்சி செய்தியாளர் திரு. செந்தில் குமார் அவர்களின் குடும்பத்திற்கு சிறப்பு நிகழ்வாக முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9